


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் 6 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நிருவாகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் சென்னை, பெரும்பாக்கத்தில் 6.94 கோடி ரூபாய் செலவில் அழகுப்படுத்தப்பட்ட பூங்கா மற்றும் வில்லிவாக்கம், பாடி, வடபழனி ஆகிய இடங்களில் 11.50 கோடி ரூபாய் செலவில் மேம்பாலங்களின் கீழ் அழகுபடுத்தும் பணிகள் ஆகிய 4 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்து, 91.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13 முதல்வர் படைப்பகங்கள் உள்ளிட்ட 26 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் 'வேர்களைத் தேடி' திட்டத்தின் கீழ், 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு, நேற்று முன்தினம் (1.8.2025) முதல் 15.8.2025 வரையிலான தமிழக பண்பாட்டுப் பயணத்திற்கான பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை மற்றும் உடைகள் போன்ற பொருட்களை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சிறப்புச் செயலாளர் சஜ்ஜன் சிங் ரா சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### செப்டம்பர் 9-ஆம் தேதி

# குடியரசு துணைத் தலைவர் தேர்தல்!


## தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, ஆக.3-

குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல், செப்டம்பர் 9 ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், கடந்த 21 ஆம் தேதி திடீரென ராஜினாமா செய்தார். நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரின் முதல் நாளிலேயே, மாநிலங்களவையின் தலைவரான அவர், ராஜினாமா அறிவிப்பை வெளியிட்டார். அவரது ராஜினாமா விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த நிலையில், குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் அறிவிப்பை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டது. குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் ஆகஸ்ட் 7 ஆம் தேதி தொடங்கி, 21 ஆம் தேதி வரை நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது. வேட்பு மனுக்களை திரும்பப்பெற ஆகஸ்ட் 25 ஆம் தேதி கடைசி நாளாகும்.

குடியரசுத் துணைத் தலைவருக்கான தேர்தல் செப்டம்பர் 9 ஆம் தேதி காலை 10 மணி முதல், மாலை 5 மணிவரை நடைபெறும் எனவும் அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. குடியரசுத் துணைத் தலைவரை மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி" திட்டத்தின் கீழ், 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு, 1.8.2025 அன்று முதல் 15.8.2025 வரையிலான தமிழக பண்பாட்டுப் பயணத்திற்கான பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை மற்றும் உடைகள் போன்ற பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சிறப்புச் செயலாளர் சஜ்ஜன் சிங் ரா சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் மாநிலத்தின் சுற்றுலாத் தலங்களை உலகத்தரத்தில் மேம்படுத்தும் நோக்கில், குண்டாறு அணை, ஏலகிரி, பூண்டி நீர்த்தேக்கம், முத்துக்குடா கடற்கரை மற்றும் மதுரை ஓட்டல் தமிழ்நாடு வளாகம் ஆகியவற்றில் 18 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 5 புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், சுற்றுலாத்துறை இயக்குநர் தா. கிறிஸ்துராஜ்மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்ரமராஜா சந்தித்து, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பாக உரிமம் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவது குறித்து அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவின் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக துறை அலுவலர்கள் மற்றும் வணிகர் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக, நன்றி தெரிவித்துக்கொண்டனர். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பொருளாளர் ஏ.எம். சதக்கத்துல்லா மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு ஊரக அமைப்புகளில்

# கிராமப்புற விழிப்புணர்வை உருவாக்க எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தருமபுரி எம்.பி. வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி,ஆக.3-

தமிழ்நாட்டில் தூய்மை இந்தியா திட்டம் கிராமீன் (எஸ்.பி.எம் ஜி) தொடங்கப்பட்டதிலிருந்து செயல்படுத்தப்பட்ட நிலை என்ன?

தமிழ்நாட்டில் குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இதுவரை நிர்ணயிக்கப்பட்ட மற்றும் அடையப்பட்ட இலக்குகள்,கட்டப்பட்ட (ஐ.எச்.எச்.எல்) தனிநபர் வீட்டு கழிப்பறைகளின் எண்ணிக்கை, தமிழ்நாடு ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை (எஸ். எல். டபிள்யூ.எம்) திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் இவை நிறைவடைந்த கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை,

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமப்புறங்களும் (ஓ.டி. எஃப்) திறந்த வெளி கழிப்பிடம் இல்லாதவை என்று அறிவிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு இல்லையென்றால், அதன் விவரங்கள் மற்றும், நிலுவையில் உள்ள பகுதிகளுக்கு அத்திட்டங்கள் செயல்படுத்தாத காரணங்கள் என்ன ?

நாடு முழுமையான திறந்தவெளி கழிப்பிடம் (ஓ.டி. எஃப்) நிலையை அடைவதற்கு ஒன்றிய அரசு நிர்ண யித்துள்ள காலக்கெடு என்ன? தமிழ்நாடு ஊரக அமைப்புகளிடையே சமூக ஈடுபாட்டை வலுப்படுத்தவும், கிராமப்புற விழிப்புணர்வை உருவாக்கவும், தமிழ்நாடு ஊரக அமைப்புகளில் திறம்பட செயல்படுத்தவும் இதுவரை ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று

மாநில ஜல் சக்தி அமைச்சர் வி. சோமண்ணாவிடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்ட துணை அமைப்பாளர் பொறுப்புக்கு, திருச்சி வடக்கு – திருச்சி மத்திய–பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!















கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார்.

அந்த வகையில், நேற்று முன்தினம், திருச்சி வடக்கு – திருச்சி மத்திய –பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் சமூக வலைதளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் சி.ஆனந்த்குமார் முன்னிலையில் நேர்காணல் செய்தார்.

அவர்கள் ஆற்றிய கழகப் பணிகள் – கொண்டு வந்திருந்த மினிட் புத்தகங்கள் – சமூக வலைதளப் பக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து பணி சிறக்க வாழ்த்தினார்.